அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 23/2019

எனது இல : EST-6/03/LEA/3390
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2019.08.26

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**புற்றுநோய் பீடிக்கப்பட்டதன் காரணமாக தாபன விதிக்கோவையின் XXIII ஆம் அத்தியாயத்துக்கு ஏற்ப வழங்கப்படும் முழுச் சம்பளத்துடன் கூடிய விசேட விடுமுறைக் காலத்தினை நீடிப்புச்செய்தல்**

தாபனவிதிக் கோவையின் XXIII ஆம் அத்தியாயத்தின் 1:3 உப பிரிவின் மீது உமது அவதானம் கோரப்படுகின்றது.

02. அவ் உப பிரிவினை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளமைப்பதற்கு 2019.07.19 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

1:3 புற்றுநோய் – 06 மாதங்களுக்கு மேற்படாத முழுச் சம்பளத்துடன் கூடிய விசேட விடுமுறையை வழங்க முடியும். 06 மாதங்களுக்கு விசேட விடுமுறை முடிவடைந்த பின்னர் மேலும் விடுமுறை அவசியம் என வைத்திய சபை பரிந்துரை செய்யுமாயின் 03 மாதங்களுக்கு மேற்படாத மேலதிக விடுமுறைக் காலத்துக்கு முழுச் சம்பளத்துடன் வழங்க முடியும்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு